# தமிழ்நாடு முழுவதும் முத்தமிழறிஞர் கலைஞர் 102வது பிறந்தநாள் விழா: திருவுருவப்படத்திற்கு மலர்தூவி மரியாதை! நலத்திட்ட உதவிகள் வழங்கல்!



முத்தமிழறிஞர் செம்மொழி நாயகர் தலைவர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை செண்பக இல்லத்தில் வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சரும், கடலூர் கிழக்கு மாவட்ட கழக செயலாளர், கழக உயர்நிலை செயல் திட்ட குழு உறுப்பினர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.



உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு நடத்தி தமிழுக்கு பெருமை சேர்த்த முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் மலர் தூவி மரியாதை செலுத்தி வணங்கினார்



நவீன தமிழகத்தின் தந்தை கலைஞர் அவர்களின் 102 ஆவது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு தூத்துக்குடி வடக்கு மாவட்ட திமுக சண்முகபுரம் பகுதி சார்பில் தூய்மை பணியாளர்களுக்கு நலத்திட்ட உதவிகள் மற்றும் மதிய உணவை சமூக நலத்துறை மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் பெ.கீதா ஜீவன் வழங்கினார். உடன் மேயர் ஜெகன் பெரியசாமி, மாநகர செயலாளர் ஆனந்தசேகரன்,பகுதி செயலாளர் சுரேஷ்குமார், மாவட்ட பிரதிநிதிகள் ராஜ்குமார், அனல் சக்திவேல், மாமன்ற உறுப்பினர் சரண்யா, வட்டச் செயலாளர் பொன்ராஜ், பகுதி துணைச் செயலாளர் ஜெய்சிங், மாவட்ட மருத்துவரணி தலைவர் அருண்குமார், பகுதி இளைஞரணி அமைப்பாளர் சூர்யா மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்த தினத்தை செம்மொழி நாளாக கொண்டாடுமாறு கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்ததை தொடர்ந்து மதுரை வடக்கு, தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பாக வண்டியூர் ரிங் ரோடு டோல்கேட் அருகே அமைந்துள்ள தலைவர் கலைஞர் அவர்களின் முழு உருவ வெண்கலச் சிலைக்கு வடக்கு மாவட்டச் செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, தெற்கு மாவட்ட செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் முன்னிலையில் மாலை அணிவித்து இனிப்புகள் மற்றும் அன்னதானம் வழங்கினார். இந்நிகழ்வில் கழக நிர்வாகிகள் ஆ.வெங்கடேசன் எம் எல் ஏ, எம்.ஆர்.எம். பாலசுப்பிரமணியன், கரு தியாகராஜன், தன செல்வம், வடிவேல் முருகன், ஏர்போர்ட் பாண்டியன், அன்பழகன், காவேரி, சுதன், மதி வெங்கடேஷ், சோமசுந்தர பாண்டியன், வக்கீல் ஆர்.பாலாஜி, சிவனாண்டி, வக்கில் கலாநிதி, நேருபாண்டியன், முத்துராமலிங்கம், வீர கணேசன், சம்மட்டிபுரம் கணேசன், ஆசைக்கண்ணன், ரோகினி பொம்மதேவன், இளங்கோ, விமல், வாசுகி சசிக்குமார், சுவிதா விமல், ஸ்ரீதர், அ.பா.ரகுபதி, சிறைச்செல்வன், மதன்குமார், கிருஷ்ணா பாண்டியன், பொதும்பு தனசேகர் ஆகியோர் கலந்து கொண்டனர்.



நெல்லை கிழக்கு மாவட்ட தி.மு.க சார்பில் தமிழகத்தை வடிவமைத்த நவீன சிற்பி,சமத்துவ நாயகர், முத்தமிழறிஞர் "கலைஞர் அவர்களின் 102 வது பிறந்த செம்மொழி நாள் நேற்று (03.06.2025) பாளையங்கோட்டை தெற்கு மற்றும் மத்திய ஒன்றியங்களின் சார்பில் நொச்சிகுளம் ஊராட்சி,கிருஷ்ணா புரம்,திருச்செந்தூர் சாலையில் வைக்கப்பட்டிருந்த கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா.ஆவுடையப்பன் தலைமையில் மாலை அணிவித்து,மலர்தூவி பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கினார்.உடன் பாளை மத்திய ஒன்றிய செயலாளர் போர்வெல் கணேசன்,பாளை தெற்கு ஒன்றிய பொறுப்பாளர் சுபாஷ் சந்திரபோஸ், மாநில தொண்டரணி துணைச் செயலாளர் ஆவின் ஆறுமுகம், மாநில விவசாய தொழிலாளர் அணி துணைச் செயலாளர் கணேஷ் குமார் ஆதித்தன்,பொதுக்குழு உறுப்பினர் பரமசிவ ஜயப்பன்,மாவட்ட வழக்கறிஞரணி அமைப்பாளர் ஜெ.செல்வ சூடாமணி,மாவட்ட தொண்டரணி துணை அமைப்பாளர் இசக்கிபாண்டியன் உள்பட கழக நிர்வாகிகள் உள்ளனர்.



தேனி வடக்கு மாவட்ட சார்பாக தேனி மாவட்டம் உருவாக்கி தந்த முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 102 ஆவது பிறந்த நாளை முன்னிட்டு தேனியில் வடக்கு மாவட்ட செயலாளர் தங்கத்தமிழ்செல்வன் தலைமையில் பேரணியாக சென்று கலைஞர் அவர்களின் திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து இனிப்பு வழங்கி பிறந்தநாள் கொண்டாடப்பட்டது உடன் சரவணகுமார் எம்.எல்.ஏ. மற்றும் நகர செயலாளர்கள், ஒன்றிய செயலாளர்கள், கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.



மதுரை மாநகர் மாவட்ட திமுக சார்பில் முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் பிறந்த தினத்தை முன்னிட்டு மதுரை சிம்மக்கல்லில் உள்ள அன்னாரது திருவுருவ வெண்கல சிலைக்கு மாநகர் மாவட்ட செயலாளர் கோ தளபதி எம்.எல்.ஏ. உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினர் பொன் முத்துராமலிங்கம், மாநில தணிக்கை குழு உறுப்பினர் வ. வேலுசாமி ஆகியோர் முன்னிலையில் மாலை அணிவித்தார். உடன் மா. ஜெயராம், மா.ஒச்சு பாலு, சின்னம்மாள், மூவேந்திரன், ராகவன், முருகவேல், மேயர் இந்திராணி இளைஞர் அணி சௌந்தர்ராஜன் மற்றும் பகுதி கழக வட்டக் கழக செயலாளர்கள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள், மண்டல தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் திரளான கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர் .




முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்தநாளை முன்னிட்டு மதுரை உயர்நீதிமன்ற கிளையில் அரசு பிளீடர் பா.திலக்குமார் தலைமையில் தலைவர் கலைஞர் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்தும், புகழ் வணக்கம் செய்து,இனிப்புகள் வழங்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து மதியம் 1.30 மணியளவில் எம்.பி.ஏ. வழக்கறிஞர் சங்கத்தில் இளம் வழக்கறிஞர்களுக்கு சட்ட புத்தகம் வழங்கி பிறந்தநாள் விழா கொண்டாடப்பட்டது. அது சமயம் கழக அரசு வழக்கறிஞர்கள் கழக வழக்கறிஞர்கள் அனைவரும் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர். உடன் கழக மூத்த வழக்கறிஞர்கள் திரளாக கழக கலந்து கொண்டனர்.



சிவகங்கை மாவட்டம் காரைக்குடி யில் முத்தமிழறிஞர் கலைஞர் 102வது பிறந்த நாளை முன்னிட்டு அவரது திருவுருவப் படத்திற்கு முன்னாள் அமைச்சர் மு.தென்னவன் மலர் தூவி மரியாதை செலுத்தினார். இதில் மாநகர செயலாளர் துணை மேயர் நா.குணசேகரன், மேயர் செயற்குழு உறுப்பினர் எஸ்.முத்துதுரை, துணை செயலாளர் சொ.கண்ணன் மற்றும் மாநகர கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.